DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.40/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.5

(Accused present)

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.மோகன்ராஜ் | Caste | : |
| Father's Name | : மகாலிங்கம் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 13th day of August, 2024.

முதல் விசாரணை

நான் செங்குன்றாபுரம் புதுக்காலனியில் வசித்து வருகிறேன். நான் சென்ட்ரிங் வேலை பார்த்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன செல்வகணேஷ் எனக்கு தம்பி முறை வேண்டும். செல்வகணேஷ் தம்பி பெயர் நாகராஜ். நாங்கள் மூவரும்ஒன்றாக சென்ட்ரிங் வேலை பார்த்து வந்தோம். இறந்துபோன செல்வகணேஷிற்கு டபிள்யூ.புதுப்பட்டியை சேர்ந்த பாண்டீஸ்வரியுடன் திருமணம் நிச்சயமானது. சம்பவத்திற்கு 1 மாதத்திற்கு முன்பு நிச்சயம் நடைபெற்றது. செல்வகணேஷ் நிச்சியத்திற்கு பிறகு பாண்டீஸ்வரியின் சொந்தஊரான டபிள்யூ.புதுப்பட்டிக்கு போகவும் வரவுமாக இருந்தான். கடந்த 08.11.2021ம் தேதி நான் செல்வகணேஷை வேலைக்கு அழைப்பதற்காக சென்றேன். டபிள்யூ.புதுப்பட்டிக்கு சென்ற செல்வகணேஷ் இன்னும் வரவில்லை என்று அவரது தாயரும், தம்பியும் கூறினார்கள். நானும், என்னுடன் வேலை பார்ப்பவரும் எரிச்சநத்தத்திற்கு வந்தோம். அப்போது கோட்டையம்மன் கோவில் அருகே கூட்டமாக இருந்தது. நான் வேலைக்கு

செல்ல எத்தனித்தபோது செல்வகணேஷ் வீட்டிற்கு வரவில்லை என்று வீட்டார்கூறியது ஞாபகம் வந்ததால் நான்போய் திரும்பி பார்த்தேன். அவ்வாறு போகும்போது செல்வகணேஷின் தம்பி நாகராஜிற்கும் போன் செய்து வரச்சொல்லி நாங்கள் இருவரும் போய் பார்த்தபோது முகமும், இடுப்பிற்கு கீழும் எரிந்து தீக்காயங்களுடன் இறந்துகிடந்தார். ஊர்காரர்களும் வந்துவிட்டார்கள். நாகராஜூம்,அவரது பெற்றோர்களும், சதீஷ்குமார் என்பவரும் இது குறித்து புகார் கொடுப்பதற்காக எம்.புதுப்பட்டி காவல்நிலையத்திற்கு சென்றார்கள். இது சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை–</u>

நான் கோட்டையம்மன்கோவில் அருகே சென்றபோது எத்தனை மணி இருக்கும் என்றால் காலை07.00 மணி முதல் 07.15 மணிக்குள் இருக்கும். நான் போகும்போது காவல்துறையினர் பிரேதத்தின் அருகில் நின்று விசாரித்துக் கொண்டிருந்தனர் என்றால் சரிதான். நான் தகவல் சொன்னவுடன் நாகராஜ், முருகேஷ்வரி, தன்னாசி, பெற்றோர் வந்தார்களா என்றால் முதலில் நாகராஜ் வந்தார், பின்னர் அரை மணி நேரம் கழித்து மற்றவர்கள் வந்தார்கள். அப்போது போலீஸார் என்னையும், மேலே சொன்ன நபர்களையும் விசாரித்தனார் என்றால் விசாரித்தனர். போலீஸார் புகார் கொடுக்க சொன்னதால் இறந்த செல்வகணேஷின் அப்பா, அம்மா, அக்கா, அக்காவின் கணவர் தன்னாசி, நாகராஜ் புகார் கொடுக்க எம்.புதுப்பட்டி காவல்நிலையத்திற்கு சென்றனர் என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை –இல்லை</u>

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.40/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.6

(Accused present)

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.சதீஷ்குமார் | Caste | : |
| Father's Name | : முருகேசன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 13th day of August, 2024.

முதல் விசாரணை

நான் செங்குன்றாபுரத்தில் வசித்து வருகிறேன். நான் பாரத ஸ்டேட் வங்கியில் பணிபுரிந்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன செல்வகணேஷ் எனக்கு தம்பி முறை ஆவார். கடந்த 08.11.2021ம்தேதி செல்வகணேஷ் வண்டியுடன் ஊரணி இரக்கத்தில் இருந்த கோட்டையம்மன் கோவில் அருகே எரிந்த நிலையில் இறந்துகிடந்தார். அப்போது அது சம்மந்தமாக இறந்துபோனவரின் தம்பி நாகராஜ் என்னை அழைத்ததன்பேரில் எம்.புதுப்பட்டி காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்கச்சென்றேன். அப்போது நாகராஜிற்கு எழுதப்படிக்கத்தெரியாதுஎன்பதால் அவர் புகாரில் தெரிவித்த விவரத்தை அவர்சொல்லச்சொல்ல நான்எழுதி அந்தபுகாரை காவல்துறையினரிடம் ஒப்படைத்தோம். அதில் எழுதியோர் மற்றும் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன். அந்த கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.2 ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை-

புகார் கொடுப்பதற்கு காவல்நிலையத்திற்கு காலை 08.30 மணியளவில் சென்றோம். நாகராஜ் குடும்பத்தார் யார் யார் காவல்நிலையத்திற்கு வந்தார்கள் என்றால் நாகராஜூம் அவரது பெற்றோர்களும் என்னுடன் வந்தார்கள். நாகராஜின் குடும்பத்தினரிடம் கலந்துபேசி அவர் சொன்னதைத்தான் அவர் சொல்லச் சொல்ல நான் எழுதினேன். அந்த புகாரில் என் அண்ணனை யாரோ மர்ம நபர்கள் அடித்து கொலை செய்ததை கண்டுபிடித்து கொடுக்கவேண்டும் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். புகாரை நான் எழுதியபிறகு நாகராஜ், அவரது பெற்றோர்கள் மற்றும் சகோதரி, சகோதரியின் கணவர் ஆகியோரிடம் படித்துக்காட்டிய பின்னர் தான் நாகராஜிடம் கையொப்பம் பெற்று காவல்நிலையத்தில் கொடுத்தோம் என்றால் சரிதான். புகார்கொடுக்கும் போது போலீஸார் நாகராஜ், அவரது பெற்றோர்கள், சகோதரி, சகோதரியின் கணவர் தன்னாசி ஆகியோர்களை விசாரித்தார்கள் என்றால் விசாரித்தார்கள்.

மறுவிசாரணை – இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.40/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.7

(Accused present)

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.அழகுராஜா | Caste | : |
| Father's Name | : கிருஷ்ணன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 13th day of August, 2024.

முதல் விசாரணை

நான் செங்குன்றாபுரத்தில் காளியம்மன்கோவில் தெருவில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். சாட்சி முனியசாமியை தெரியும். கடந்த 08.11.2021ம்தேதி காலை 09.45 மணிக்கு நானும் சாட்சி முனியசாமியும் வேலைக்கு செல்வதற்காக செங்குன்றாபுரம் விலக்கில் நின்றபோது செல்வகணேஷ் பாதிஎரிந்த நிலையில் கிடப்பதாக சொன்னார்கள். நாங்கள் செல்வகணேஷ் இறந்துகிடந்த இடமான கோட்டையம்மன்கோவில் அருகே சென்றோம். நாங்கள் பார்த்தபோது அவர் பாதிஎரிந்த நிலையில் இருந்தார். வண்டி அவர் மீது கிடந்தது. வண்டியின் பதிவு எண் TN 67 BJ 3135 ஆகும். அப்போது பெண் ஆய்வாளர் அங்கு வந்து புலன்விசாரணைக்கு உதவியாக இருக்குமாறு கேட்டுக்கொண்டார். நானும், முனியசாமியும் சம்மதம் சொன்னோம். அப்போது ரத்தம்பட்ட மண், ரத்தம்படாத மண்,ரத்தக்கறை படிந்த கல்ஒன்று, பாதி எரிந்தநிலையில் பெட்ரோல் வாடையுடன் கூடிய வாட்டர் கேன், வண்டி நம்பர்பிளேட், வண்டி

ஆகியவற்றையும் அத்தாட்சியின்பேரில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும், முனியசாமியும் கையெழுத்து செய்தோம். அந்த அத்தாட்சி அ.த.சா.ஆ.3, ரத்தம்பட்ட மண் சா.பொ.2, ரத்தம்படாத மண் சா.பொ.3, ரத்தக்கறை படிந்த கல்ஒன்று சா.பா.4, பாதி எரிந்தநிலையில் பெட்ரோல் வாடையுடன் கூடிய வாட்டர் கேன் சா.பொ.5, இருசக்கரவாகனத்தின் நம்பர் பிளேட் சா.பொ.6 ஆகும். சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தார்கள். அந்த பார்வை மகஜரில் நானும், முனியசாமியும் கையெழுத்து செய்தோம். அந்த பார்வை மகஜர் அ.த.சா.ஆ.4 ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை–

பொதுவாக காலையில் 07.00 மணிக்கு ஒரு பொதுவான இடத்தில் நாங்கள் கூடுவோம், பெரிய கொத்தனார் எந்த இடத்திற்கு வேலைக்கு செல்ல வேண்டும் என்று சொல்வார் என்றால் சரிதான். காலை 09.45 மணிக்கு நான் வேலைக்கு செல்வற்காக நின்றதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றும்,என் முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம், அத்தாட்சி தயார் செய்யப்படவில்லை என்றாலும், அதன்பேரில் சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் காவல்நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்களில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இறந்துபோன செல்வகணேஷ் எனது உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.